15543

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



# "வேட்கோவர் மகிமை"



ரெளத்ரி தை, 16ஆம் நாள்
29—1—1981 வியாழன்

...ளியீடு எண் . 3

# வேட்கோவர் மகிமை

17281
(15543)



நிகழ் ரௌத்ரி ஆண்டு தைமாதம் 16ஆம் நாள் (29-1-81) வியாழக்கிழமையன்று பெரியகாஞ்சிபுரம் குலால மரபினர் தர்ம பரிபாலன சங்கத்தின் திருநீலகண்டர் சத்திரத்தில் நடைபெற்ற திருநீலகண்டர் குருபூஜை விழாவில்,

குலாலப் பெருந்தகை

உயர்திருவினார். M ஷண்முக உடையார்

அவர்களின் பொருளுதவியினால் வெளியிடப்பெற்றது.

வெளியிடுபவர்:

**திருநெறி மன்றம்,**

முசரவாக்கம்-631554.

17281



குலாலப் பெருந்தகை

**திருவாளர். M. ஷண்முக உடையார்**

**ஸ்ரீ சரஸ்வதி ஜவுளி ஸ்டோர்ஸ், காஞ்சிபுரம்.**

காஞ்சிமா நகர்க்கெழிலாம் காமராஜர் வீதியதில்
வாஞ்சையுடன் வாழ்குலால வள்ளலாம் சண்முகனர்
தீஞ்சுவை வேட்கோவர் திகழ்பாவை அச்சிட்டார்
காஞ்சிஏ கம்பனுல் காலமெலாம் வாழ்க! வாழ்க!

உ

திருச்சிற்றம்பலம்



காஞ்சி சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் சீடர்

முத்தமிழ்ப் புலவர் **மு. பெ. அருச்சுன உடையார்**

(மகாபாரதச் சொற்பொழிவாளர், தமிழ்நாடு கம்பன் குலால மன்ற செயலாளர்)

அவர்களால் தொகுக்கப்பட்ட **"வேட்கோவர் மகிமை"**யை

வெளியிட்டவர்:

**திருவாளர். மு. தியாகராசன் அவர்கள்**

*டிரஸ்டி. P. S. உடையார் அறக்கட்டளை, சென்னை.*

முதற்பிரதி பெற்றவர்: குலாலப்பெருந்தகை. திரு. **M. ஷண்முக உடையார்,**

*தலைவர், பெரிய காஞ்சிபுரம், குலால மரபினர் தர்ம பரிபாலனம்.*

<u>பாராட்டிப் பேசியவர்கள்:</u>

திருவாளர் N. இராமசாமி உடையார், ஓய்வுபெற்ற தாசில்தார், காஞ்சிபுரம்.

,, க. கன்னியப்ப உடையார், செயலர், கு.த. பரிபாலனம், காஞ்சிபுரம்-2

,, நா. ப. தணிகை அரசு, தொண்டைமண்டலாதீனப் பாவலர்.

,, ந. சாம்பசிவம் பிள்ளை, ஓய்வுபெற்ற ஆசிரியர், முசரவாக்கம்.

புலவர் ,, பு. மா. செயச்செந்தில்நாதன், M.A., காஞ்சி.

புலவர் ,, சு. பிரகாசம், M.A., அ. உ. ப. தாமல்.

## பிழை திருத்தம் செய்து படிக்கவும்

| பக்கம் | | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 9, 10, 11 | | ருக் | இருக்கு |
| 16 | | தெம்வம் | தெய்வம் |
| 20 | 51 செய்யுள் | கூத்தாம் | கூத்தாடும் |
| | | என்றுமிவ | என்றுமிவ் |
| 21 | 18 வரி | செய்து | செய்தது |
| 22 | 4 வரி | அடிச்ச | அடிக்க |
| 24 | 5 செய்யுள் | நகைக்கலென்ன | நகைகளென்ன |
| 24 | திருப்புகழ் | தன்பூசையும் | பூசையும் |

விலை: திருநெறிமன்ற வளர்ச்சிக்காக ரு. 1—00
தபால் செலவு 0—25

**1—25**

உ

**க. கன்னியப்ப உடையார்,**
செயலாளர்,
பெரிய காஞ்சிபுரம் குலால மரபினர் தர்ம பரிபாலன சங்கம்,
காஞ்சி சிவனடியார் திருக்கூட்டம்

அவர்களின்

# அணிந்துரை

உலகப் பொதுமறையாம் திருக்குறளிலே கல்வி ஒவ்வொருவருக்கும் அவசியம் என்றும் அதைவிட உயிர்க்கு விழுமம் தரத்தக்கது இவ்வுலகில் வேறொன்றும் இல்லை என்றும் கூறிய திருவள்ளுவர் கற்க வேண்டியவற்றைக் கசடறக் கற்க வேண்டுமென்றும், கற்றவற்றை உணர்ந்து அவை கூறுவனவற்றைத் தாம் தம் வாழ்க்கையில் கடைப் -பிடிக்கவேண்டும் என்று கூறியதோடு தாம் கற்றவற்றைப் பிறருக்கு எடுத்து கூறவேண்டும் என்றும் கூறுகிறார். அப்படித் தாம் கற்ற -வற்றைப் பிறருக்கு எடுத்துக்கூறிக் கல்வி அறிவுகளாற் பயன் துய்க்காதவரை கல்லாதவரின் கடையரென உலகம் பழிக்கும் என்று கூறுகின்றார். இந்நூலின் தொகுப்பாசிரியராக விளங்கும் முத்தமிழ்ப் புலவர் திருவாளர் மு. பெ. **அருச்சுன உடையார்** அவர்கள் நூல் பலகற்று, புலவர் பட்டமும் பெற்று தொண்டைமண்டலாதீனம் சீலத்திரு.ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளின் சீடராகி அவரது அருளாசிக்குப் பாத்திரராகி இருப்பதுடன் தாம் கற்ற நூலறிவால் வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்ப உலகமும் பயன் துய்க்கவேண்டும் என்ற உயரிய கருத்துடன் தமது இனிய சொற்பொழிவுகளினால் மக்களை மகிழ்வித்து ஆன்மீக நெறிப் படுத்தியும் வருகிறார். மகாபாரதச் சொற்பொழிவும் ஆற்றி வருகிறார். இஃதுடன் காஞ்சி மாநகரில் சிறப்புடன் சமயப்பணி ஆற்றிவரும் காஞ்சிச் சிவனடியார் திருக்கூட்டத்தில் புலவராக இருந்து அறிய பல விரிவுரைகளை ஆற்றித் திருக்கூட்டத்தினரையும் மகிழ்விக்கின்றார். இத்தகைய பேற்றையே இராமலிங்க சுவாமிகளும் இறைவனிடம் வேண்டுகிறார்.

''எப்பாரும் எப்பதமும் எங்ஙனும் நான்சென்று
எந்தை நின தருட்புகழை யியம்பியிடல் வேண்டும்''

கற்றதனால் ஆயபயன் முற்றறிவுடையவனின் தாள் தொழுதலன்றோ

திருநெறி மன்றம் என்ற அமைப்பை நிறுவித் தாமே தலைவராக இருந்து தமது சிற்றூரில் சிறுவர் முதல் பெரியவர் வரை திருநெறியிலே நெறிப்படுத்திவருகின்றார். இத்தகைய பண்புசால் புலவர் அவர்கள் நம் இனத்தவர்கள் இனப்பற்றுடன் திகழவேண்டும் என்ற கருத்துடன் நமது குலால மரபின் பெருமைகள் அனைத்தையும் சங்க நூல்களிருந்தும் புராண இதிகாசங்களிலிருந்தும் தொகுத்து நூலாகத் தந்துள்ளார். இந்நூலைப் படிக்கும்போது நம் குலத்தின் பெருமையை இதுகாறும் நாம் அறியாமல் கழித்தோமே என்ற எண்ணம் உண்டாகிறது. தொகுப்பாசிரியரின் கடமையுணர்வு தெற்றென விளங்குகின்றது. அவர் மேற்கொண்ட அயரா முயற்சி மிளிர்கின்றது. இத்தகைய முயற்சி தாம் துய்த்ததைப் பிறரும் துய்க்க வேண்டும் என்ற பரோபகாரச் சிந்தை உள்ளவர்கட்கு மட்டுமே உரித்து.

இனி நூலின் சில இடங்களை நோக்குவோம். உலகத்தில் ஓரறிவு முதல் ஆறறிவுவரை உள்ள உயிர்களனைத்தையும் படைக்கும் பிரமனும், மண்ணதை யெடுத்து நீரால் வகையுடன் பிசைந்து பாண்டம் பண்ணும் குலாலனும் ஓரினம் (படைத்தல் தொழில் செய்தலினால்) என்பதற்குப் பல பாடல்களைத் தொகுத்துள்ளார். குறுமுனியாம் அகத்திய முனிவர் குலாலர் என்று சங்கர வேத மொழியினின்றும், வேங்கடவாணன் கோவையினின்றும், கந்த புராணத்தினின்றும் எடுத்துக் கூறியுள்ளார். குலாலர் மனை பிரம்மஸ்தானம் என்றும் அவர் வீட்டில் ஓரிரவு தங்கினாலும் எண்ணியது கைகூடும், பாபம் தொலையும், தோஷம் நீங்கும். இம்மையிலும் மறுமையிலும் முத்தி மோட்சம் அடைவர்.எனவேதான் பாண்டவர்கள் பாஞ்சால நாட்டில் "பார்க்கவன்" என்ற குலாலர் வீட்டில் தங்கினர் என்ற கருத்தை ரிக்கு வேதத்தினின்றும் பாரதத்தினின்றும் தந்துள்ளார். கரிகாற்சோழன் மருதை ஆற்றங்கரையில் இருந்த ஒரு குலாலனால் வளர்க்கப்பட்டவன் என்பதற்கு தக்க மேற்கொள் காண்பித்துள்ளார். சாலிவாகனனுடைய சரிதத்தை விரிவாக இந் நூலில் ஆசிரியர் கூறியுள்ளார்.

குலாலர் கல்வி கேள்விகளிற் சிறந்திருந்தனர் என்பதற்குச் சான்றாக குலோத்துங்க சோழனின் அவைப்புலவரான ஒட்டக்கூத்தர் தாம் கவிபாடுவதில் யானையை ஒத்தவன் என்று கர்வம்படக் கூற, அதற்கு அவர் எதிரிலே இருந்த குலால சிறுவன் அவ்யானையை அடக்கும் அங்குசம் நான் என்றுகூறிய பாடல் சுவைபட உள்ளது

"மோனே முத்தமிழ் மும்மத மும்மொழி
யானே முன்வந் தெதிர்த்தவ னுரடா?" — என்ற வினுவிற்கு
"கூனே யுங் குடமுங் குண்டு சட்டியும்
பானேயுஞ் செயு மங்குசப் பையல் யான்" —என்று விடை கூறினுன்.

வெண்ணிக்குயத்தியார், கம்பர் நம்குலத்தைச் சார்ந்தவர்கள் என்பதையும் நாம் அறிவோம்.

இவ்வாறெல்லாம் குலாலரது பெருமையை தொகுத்துரைத்த நம்புலவர் ஒருநற்சவிஞரும், நூலாசிரியரும் கூட இவர். திருவேகம்பப் பெருமான் திருவருளினுல் நெடிது வாழ்ந்து குறைவற்ற செல்வம் பெற்று இவ் ஞானவேள்வியை இவ்வவனியிலே செவ்வனே செய்ய வேண்டி வாழ்க என வாழ்த்துகின்றேன்.

இவ்வரியநூலே அச்சிட்டு நமக்கு வழங்குபவர் நம் குலாலப் பெருந்தகை, பெரிய காஞ்சிபுரம் குலால மரபினர் தர்மபரிபாலன சங்கத்தின் ஒப்பற்ற பெருந்தலேவர் பிறர் நலம் பேணும் பெற்றியர் உயர்திருவினுர் M. **ஷண்முக உடையார்** அவர்கள் ஸ்ரீ சரஸ்வதி ஜவுளி மாளிகை காஞ்சிபுரம். "இட்டார் பெரியோர்" என்ற ஔவையின் முதுமொழிக்கிணங்க ஈத்துவக்கும் இன்பத்தைப் பெரிதும் நுகர்ந்தவரும் நுகர்ந்துகொண்டுவருபவருமான நமது தலேவர் உண்மையிலேயே பெரியவர்தாம். ஸ்ரீ சங்குபாணிவிநாயகர் அருள்நலத்திற்குப் பெரிதும் பாத்திரராகி உள்ள நமது பெரியவர் அவர்கள் "**திருநீலகண்டர் குருபூஜை**" விழாவாகிய இந்நன்னுளில் இவ்வரிய நூல் நமக்கு எல்லோர்க்கும் கிடைக்க வழி செய்தமைக்கு அன்னுருக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்வ–துடன் அவர் திருவேகம்பப் பெருமான் தண்ணருளினுல் சீரும், திருவும் பொலிய பல்லாண்டுகாலம் வாழ்ந்து நம் குலம் தழைக்கப் பணியாற்ற இறையருளே இறைஞ்சுகிறேன்.

காஞ்சிபுரம்,
*23—1—1981.*

அன்புள்ள,
**க. கன்னியப்ப உடையார்**

# முகவுரை

## சரஸ்வதி துதி

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விற்கும் என்னம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

வேட்கோவர் மகிமை - வேட்கோவரது பெருமை இஃது ஆறன் உருபும் பயனும் தொக்கத் தொகையாம். வே=பூமி (மண்) கோ=அரசன். ஆர் சிறப்புப்பெயர் விகுதி. (வேளாளர் வே=பூமி ஆளர்=ஆள்பவர்) இந்நூல் பத்தாண்டுகாலமாய் பலநூல்களிலிருந்து தொகுத்தும், வ்குத்தும், தொடுத்தும் அமைக்கப்பட்டது.

"நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" — குறள்

மருத்துவன் நோயாளியைக் கண்டதும் என்ன நோய். இஃது வரக் காரணம். இதை நிறுத்த என்ன மருந்து தரவேண்டுமென்று அறிதல் போல குலாலர் யார்? அவரது இயல்பு என்ன? அவர்கள் கல்வி, அறிவு, கலை, வீரம், அறம் ஆகிய துறைகளில் முற்கால நிலை, பிற்கால நிலை, தற்கால நிலை என்ன என்பதை இந்நூற் தொகுப்பு பயன்படும் தன்னேரிலாத தனிப்பெருஞ்செல்வம் உங்கள் கையிலே கிடைத்து விட்டது. ஆசைத்தீர உண்டுஉண்டு ஆனந்தக் களிப்பிலே திளையுங்கள்.

இம்முயற்சி இடையூறு இன்றி இனிது முடிய ஆக்கமும், ஊக்கமும் அளித்துதவிய குலாலப் பெருந்தகையார் காஞ்சிபுரம் M. ஷண்முக உடையார் (சரஸ்வதி ஜவுளி ஸ்டோர், காமராஜர் வீதி காஞ்சிபுரம்.) அவர்களுக்கு என் சிரந்தாழ்ந்த வணக்கத்தையும் செயலர். க. கன்னியப்ப உடையார் அவர்களுக்கும், விரைவில் பதிப்பித்து உதவிய ஸ்ரீ சக்தி அச்சக உரிமையாளருக்கும் அணிந்துரை வழங்கியவர்களுக்கும் என் நன்றியையும் கூறி முடிக்கிறேன்.

புலவர். மு. பெ. அருச்சுனன்,
அரசுயர் பள்ளி; முசரவாக்கம்-631554.

17281

உ
சிவமயம்
ஓம் குலாலப் பரப்பிரம்மழனே நம:

# வேட்கோவர் மகிமை



**விநாயகர் துதி**

அத்திமுகன் ஆறுமுகன் அம்பிகைச் சர்வேசன்
சித்திகுரு வாணியையுள் சேர்.

பிரமதேவனைக் குலாலனென்பதற்கு
பட்டினத்தார் பாடலில் சொல்லியது

1) பிட்டுண்ணி வைகை யடைத்தோன்புதல்வன் புறங் கையினல்
குட்டுண்ணி வேதக்குலாலன் படைத்த குவலயத்தில்
கட்டுண்ணி மாயன் படியளப்பான் ஒன்றுங்கவலையில்லை
பட்டினி யிருக்கத்தகுமோ அவரவர் பாதகமே.

பிரமதேவனைக் குலாலனென்று தாயுமானவர் பாடல்

சிற்சுகோதய விலாசம்

2) காகமொடு கழுகலகை நாய்நரிகள்
சுற்றுசோறிடு துருத்தியைக்
காலிரண்டுநவ வாசல் பெற்றுவளர்
காமவேணடன சாலையை
மோகவாசைமுறி யிட்ட பெட்டியையும்
மலமிகுந் தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமி தத்துகும்பியை
முடங்கலார்கிடை சரக்கினை
மாகவிந்திரதனு மின்னை யொத்திலகு
வேதமோதிய குலாலனர்
வனைய வெய்யதடி காரனை யமன்
வந்தடிக்கு மொருமட்கலத்
தேகமான பொய்யை மெய்யெனக்கருதி
யையவையமிசை வாடவோ
தெரிவதற் கரிய பிரமமேயமல
சிற்சுகோதய விலாசமே.

## பிரமதேவனைக் குலாலனென்று நெஞ்சறி விளக்கத்தில் சொல்லியது,

3) மண்ணத்தை யெடுத்து நீரால் வகையுடன் பிசைந்து பாண்டம்
பண்ணியே கனலாற் சுட்டு பாதைஒன் பதுதான் விட்டே
அண்ணலார் வாய் வாகாச வடைத்தவைம் பூதக் கூட்டை
விண்ணவர் நாகநாதர் விளையாட் டென் றறிவாய் நெஞ்சே.

## பிரமதேவனைக் குலாலனென்பதற்கு காசிவிஸ்வநாதர் பதிகத்தில் சொல்லியது

4) தோட்டவிழ் கமலக் குயவனுர் குயிற்றும் சொல்லரும்
புடம்பெனும் பாண்டம்
வோட்டை யொன்பதுகண் வொண்டொடி யார்கள்
ஓய்விலாலீலையாங் கடலுள்
போட்டியில் மூழ்குமென் மனத் தியங்கும் பொறியிலி
தனக்குநின் கமலம்
காட்டிவந் தருளுங் காசியம் பதிவாழ் காசிவிஸ்
வேச னுயகனே.

## பிரமதேவனைக் குலாலனென்பதற்கு பாச்சலூர் பாப்பத்தியம்மன் பாடல்

5) வடுவுந் தானும் மானிபம் மகனுந்தாயும் வாலிபம்
படுவமான ஊரிலே பையில் கொண்டாட நீதியோ
குடுவர் தானுமில்லையோ குலாலன் தானு ஏழையோ
நடுவர் தானுமில்லை யோ நகரிசூளை வேகுதே.

## குருவை பீடமேற்றும் வேதஸ்லோகம்

6) வருணுய ஆவாகயாமி வருணுஸ் யரு மோசனம்
இதம் பாத்யம் இதம் அர்க்யம்
இதாஸ் தானம் குலாலகா

பொருள்: வருணனை ஆவாகணம் செய்து பாத்யம் அர்க்கியம்
கொடுத்து பூசைசெய்து மீண்டும் தங்களிடத்திற்கு
திரும்பி செல்வீர்களென பிராத்தித்தல்,

## மௌன போதகப் பதிகத்தில் சொல்லியது

7) கண்மலரி லென்னமோ தூசியோ மாசியோ
கன்ம வினையோ அறிகிலேன்
கண்டவர் நகைக்கவோ நின்றுடல் பதைக்கவோ
கவலையுள் இளைக்கவே நான்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

புண்வலி யுளாகவோ யென்விதியை நோகவோ
புல்லறிவு கொண்டதுவோ
பூமியை விதிக்கின்ற நான்முகக் குலாலனைப்
பொல்லாங்கு யான் சொல்லவோ
நின்மகிமை கண்டுளோர் தெண்டனிடு தொண்டர்கள்
நீங்காமல் ஆள்வ தன்றோ
நிட்களானந்த வேதாந்த சிவ சமயமே
நிசரூப மான குருவே
திண்கொண்ட சமணரைக் கண்கொண் டெரித்திடத்
தென் கூடலம் பதியிலே
திருஞான சம்பந்த ரான குரு தேசிகா
தெண்டா யுதக் கடவுளே

ருக் வேதம்

8) வேதாங்க நாநா விதிமந்திர தந்திர மித்சான
சித்ரசகுன பிரவேஷ்யா ஆசார்ய ரூபம்
பிரமாதி கருமம் ஈத்தியே குலால
பலமுத்தி மோட்சே

பொருள்: ஆச்சாரிய ரூபமாகிய பிரம்மரூபத்தில் பிரவேசிப்பதாலும் வேதத்திற்கு அங்கமான விதிமந்திர தந்திர வித்தைகளில் பிரவேசிப்பதாலும் பிரம்மனுல் பல முத்தி மோட்சம் உண்டாகிறது.

குலாலரின் மகத்துவத்தை உலகத்தால் அறியமாட்டார்கள் என்று கருடபத்தில் கூறியது

9) தேவாதிதேவர் பலரா லுன்னுது திருநாமமோது திருவாய்
மூவாதவாய்வு உலகேழுமேழு மரசாளுமேன்மை முதல்வாய்
மேவாதயின்பம் மவைமேவி மேவிநெடு வீடுகண்டு முடிவாய்
ஆய்வார் வருந்தியழுவார் குலாலகுரு விதிகாய
(மாயையறியார்.

ருக் வேதம்

10) சுத்தசூது வேற்றி லோகத்யா
காலத்ரயா ஆதித்தியா சின்மனே
சப்த நவகோத்ர தசப்பிரம்ம
குலாலமனே.

(பொருள்) பிரம்மன் தச திக்கையும், நவகோத்ரத்தையும், சப்த ரிஷிகளையும் ஆதித்தியரையும், குலாலனுன பிரம்மா படைக்கிறுன்.

### இருக்குவேதம் சொல்லியது

11) ஆயுர்க் கருமம்சா விதஞ்சாவித்ய
நித்திய மேவசா
பஞ்சதானி விலக்கி யந்தே
கெற்பஸ்தம் குலாலவிதி

(பொருள்) வயது, செயல், கல்வி, அறிவின்மை, வீட்டுப் பேறு முதலிய ஐந்திீனயும் குலாலனைப்போல் தான் செய்த சிசுவிற்கு எழுதுவதால் பிரமா குலாலனாகிறான்.

### சிவவாக்கியார் பாடல்

12) காயமேயிது பொய்யடா காற்றடைத்த பையடா
மாயக்குயவன் செய்ததாகிய மண்ணு பாண்டம் ஓடடா.

### விப்பிரருக்கும் உயர்ந்தவன் குலாலன் என்று இருக்குவேதம் கூறுகிறது

### ருக் வேத ஸ்லோகம்

13) தேவாதி நம திரிலோகஞ்ச மத்திராதீனம் பிரணவஸ்ய
காயத்ரி பிரம்ம தேவாநாம் சிருஷ்டி குலால ஜெகத்குரு.

(பொருள்) தேவன் மூன்று உலகத்திற்கும் அதிபதியாவான், பிரணவம் (ஓம்) மந்திரத்திற்கு ஆதியாகும். அதுபோல குலாலன் (பிரம்மா) உலகத்தை சிருஷ்டிக்கும் அதிபதியாகிறான்.

### ருக் வேதம்

14) சிலமிக்கியந்து ரத்நானும் விருட்சமிக்யந்து சந்தநாம்
நரமிக்கியந்து விப்ரானும் விப்ரமிக்கியந்து குலாலகா.

(பொருள்) கற்களில் சிறந்தது இரத்தினம். மரங்களில் சிறந்தது சந்தனம், மனிதரில் சிறந்தவன் பிராமணன் அவரைவிட சிறந்தவன் குலாலனான பிரம்மா.

### ருக் வேதம்

15) ஆதிசைவோன் கருத்தஷயம் ஆத்மதஞ்ச பிரார்த்தகம்
விதிகர்மங் குலாலயோன் சகலமுத்ர மோட்சதே.

(பொருள்) ஆதிசைவன் கருத்து ஆத்மபூசை செய்வதாம். பிரம்மா சகல காரியங்களையும் செய்வார். சைவம் ஏழுக்குள் குலாலன் ஆதிசைவமுடையவன்.

டாக்டர் உ. வே.

குலாலன் மனை பிரமஸ்தானமாகையால் அதில் ஓரிரவு
தங்கினாலும் எண்ணியது கைகூடும்
இம்மையிலும் மறுமையிலும் முக்தி மோட்சமடைவர் என்று
நீதி சாஸ்திரம் கூறுகிறது.

## நீதி சாஸ்திரம்

16) சைகுதந் தண்டுலஞ்சா அன்னம் நதியிரு கோமயம்
ததா நவநீ தஞ்ச ருத்ராட்சம் பஸ்ம சந்தனம்
கூர்ச்சித புஷ்ப மாலா குலோபிண்டம் கனிகாச்சாத்
திரியோதசா யாத்ரே குலாலகிரகந்து சர்வபாவே
[பிரமுட்சியதே.

(பொருள்) மண், அரிசி, அன்னம், நதியில் கிடைக்கும் பொருள்கள், கோமயம், வெண்ணை, ருத்ராட்சம், விபூதி, சந்தனம், குயப்புல், புஷ்பம், வெல்லம், பழம் ஆகப் பதிமூன்றில் ஒன்றை யாத்திரை செய்யும் ஒருவன் குலாலன் மனையில் ஓரிரவு வாசம் செய்தாலும் ஷ பொருளில் ஒன்றைப் பெற்றாலும் முத்தியடைவர் என்பதாம்.

## குலாலனை இகழ்ந்தாலும் புகழ்ந்தாலும் முத்தியடைவர்

## ருக் வேதம்

17) ஆகார நித்ராபய, மைதுனஞ்சா ஞானவீரனே
பசுபீச மானசா ஆதிகுலால குணநீ குணநி
சமீரணக நித்யம் பலமுக்தி மோட்சே.

(பொருள்) ஆகாரத்தினால் நித்திரை, காமம் உண்டாகிறது. அதிலிருந்து ஞானம், வீரம் உண்டாகிறது. அதுபோல குலாலனை மனதினால் நினைந்து புகழ்ந்தாலும், இகழ்ந்தாலும் பலம், முக்தி, மோட்சம் கிடைக்கிறது.

## அகத்தியமுனிவர் குலாலனென்று சங்கரர் வேதமொழி

18) போகமென்றதது விளக்க மதனுண்டாச்சோ
பொய்மாயை நேத்திரமணி கிருட்ணனுச்சோ
ஆகுமென்ற குயவர்குலம் அகத்தியர்தான்
அவனிக்கு மேல்பாரம் பெரிதுண்டாச்சோ
தோகையரைச் சந்திரனைத் தோலைப் பாம்பை
துய்யசடை சுமப்பவனே பெரியோனுச்சோ
ஏகமொரு உருவினுக்குள்ளுயிராய் நின்ற
இலங்குகின்ற பொருளரியா ரேழையோரே.

### வெங்கடவாணன் கோவையில் சொல்லியது

19) பாலாழியிற்றுயில் வெங்கட வாணன் பணிவரையில்
மாலான மங்கையை நீ பிரிந்தாய் கண்கள் வாருதியாம்
கோலமறுமுருகர் வேலாந் தமிழ்தெரி தென்னவர்கோன்
காலாங் குறுமுனிகையால் வனைந்த கனஸ்தனமே

### பதினெண் சித்தர்களின் பெயர்

20) நந்தி அகத்தியர் போகரமுகண்ணர் நற்கமலர்
சுந்தரர் திருமூலர் பரமர் புண்ணாக்கினர் சொற்பிரமர்
வந்த இடையர் கருவூரார் கொங்கணர் வாசு மச்சர்
சந்தனசட்டை ரிஷிரோமர் கோரக்கர் தாள்துணையே.

### பதினெண் சித்தர்களில் கூடுதல் எண்ணிக்கையில் நால்வர் குலாலரே என்று பதினுயிரங்காண்டம் கூறுகிறது

21) அகத்தியரும் பிரமமுனி குலால ராகும்
அழு கண்ணா பரமமுனிகார் காற்றுனும்
செகத்தினிலே கோரக்கர் வணிகனுகும்
திருமூலர் இடையரென செப்ப வேண்டும்
மகத்தினிலே மிகுத்தவனும் பிண்ணாக்கீசன்
வளமான விப்ரகுலம் வகுக்கவேண்டும்
சுகத்திலே ரோமரிஷி சந்தமுநி சேடன்
தொகையான முன்னவர்கள் குலங்குடிகள் தானே.

### வேறு

22) குடிமகனுங் கருவூரார் பளிங்கிச்சாதி
கொங்கணவராம் போகர் குயவராகும்
சடிலமுடி சுந்திரனே ரெட்டியாகும்
சட்டைமுநி சேணியனு நந்திமறையோனும்

23) இடையனும் இடைக்காடர் கமலமுநி கன்னன்
நிதமான மச்சமுநி செம்படவராகும்
அடியார்கள் ஆதியிலீ ரொன்பதுபேர் சித்தர்
அவரவர்கள் குணத்தாலே ஞானியானுர்

### முத்தமிழ்த் தந்தவன் உத்தமக் குலாலனே
### (கந்த புராணம் அகத்தியப் படலம்)

24) ஆதியுற்றுழி அச்சமோ டேயெழீஇ
முதுரைத்தமிழ் முற்றுணர் மாமுனி
கோதை யுற்றிடக் கொம்பொடு வாங்கிய
பாதவத் திற் பணிந்தனன் பன்முறை

பரமசிவத்தின் கட்டளைப்படி தென்திசை வந்து பூமியை சமநிலை செய்தவர் குலாலனே (கந்தபுராணம் அகத்திய படலம்)

25) தீது நீங்கிய தென்றிசைச் சேரிய
கோதி லாத குறுமுனி தன்னெடும்
போதல் வேண்டும் பொருபுனற் காவிரி
மாது நீயென மற்றவள் கூறுவாள்

பொருள்: விதர்ப்பகோன் மகளான தன் மனைவி உலோபமுத்திரையுடன் வந்த அகத்தியரை வாதாவி-வில்வலன் என்ற அரக்கர் கொல்ல முயற்சிக்க அவர்களை ஒழித்தார்.
—கந்தபுராணம்) வாதாவி

26) அண்ணு வில்வலனே எனக்கூறி ஏதம்பி
அரிபோல் முழங்கி யிடலும்
மண்ணுடர் புகழ்கும்ப முனிதீயர் செய்திட்ட
மாயம் தெரிந்து வெகுள்வான்

கந்த புராணம்

27) கோதில் ஆற்றல்சேர் கும்பமாமுனி
தீது நோக்கியே இவரை முன்னமே
காதி னும்நமைக் கருதி வந்தனர்
மாத வத்தினேன் மைந்தன் ஆதலால்

பாம்பாட்டி சித்தர் வாக்கியம்

28) ஊத்தைக்குழியிலே மண்ணை யெடுத்து
உதிரப்புனலிலே உண்டை சேர்த்து
வாய்த்தக்குயவனுர் பண்ண பாண்டம்
வரவோட்டுக்கு மாகா தென்றுடு பாம்பே
இருவர் மண் சேர்த்திட வொருவர் பண்ண
ஈரைந்து மாதமாய் வைத்த சூளை
அருமையா யிருப்பினு மந்தசூளை
அரைகாசுக் காகாதென் றுடாய்பாம்பே

முத்தமிழ் தந்தவன் உத்தமக் குலாலனே
அகத்திய நூலைத் தந்ததுமவனே

அகத்தியர் துதி (குலால புராணம்)

29) கடவி யாசனுக்குப் புதல்வனு யுதித்துக்
கண்ட ராட்சதன் சிரம்றுத்த
குடமு னிகும்ப சக்கர னுகிக் குவலயந்
தனை நிலைநிறுத்தி

[stamp]

வடவரை விட்டு பொதிகையில் வந்து
வழங்கிடத் தமிழது படைத்துச்
சடமுனி யான வகத்திய முநிவன்
சரண வாரிசமலர் வாழியே!

## ஔவையார் பாடல்

30) பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகனே கரியாமல் உந்தியில் பூத்தோன்
கரியமாலோ அலைகடல் துயின்ருேன்
அலைகடலோ குறுமுனி கையிலடக்கம்
குறுமுனி யோ கலசத்தில் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ ஆதி சேடனுக்கு ஒருதலை பாரம்
ஆதி சேடனே உமாதேவியின் சிறுவிரல் மோதிரம்
உமாதேவியோ பரமனின் வாமபாகத் தொடுக்கம்
பரமனே தொண்டருக்குள் ஒடுக்கம்
தொண்டர் தம் பெருமையைச் சொல்லவும் போமோ

## பாண்டவர்கள் பாஞ்சால நாட்டில் பார்க்கவன் என்ற குலாலன் வீட்டில் தங்கிய காரணம்

[பாரதக் கீர்த்தனை]

31) தூரமென வழிநடந்து சோமகேசன்
தொல் பதியைக் கண்டந்தவூரில்
சீருரைசேர் குலாலன் மனைதன்னைச் சேர்ந்துதேவி
குந்தியம் மனைஅங் கிருக்கச் சொல்லி
வீரியவாள் பாஞ்சாலன் சபையைக்காண வேதியர்கூட்
டத்துட னேநடந் தாரிப் பால்
காரிகை துரௌப தைக்கித்தன் பாங்கிமார்கள்
சிங்கா ரித்தாரனை வர்க்களும் பூரித்தாரே.

## வில்லிபாரதம்

32) கண்டுகண் டரியேறுனின் கவினுடை நெடுந்தோல் போர்த்துக்
கொண்டன செயலா ராங்கோர் குலாலன திருக்கைச் சேர்ந்தார்.

ஸ்ரீ ஜோ.பாத்தியார் டாக்டர் உ. வே.

குலாலப் பிரம்மாவுக்கு மும்மூர்த்திகள் இட்ட கட்டளை

33) வணங்கிய முனிவனுக்கு வழங்கியமூவர் சொல்வார்
குணங்களில் அருள்சுயம்பு குலத்தொழில் பிரமவித்தை
இணங்கிய படியுன்னாலே யாவர்க்குமுத்தி வேண்டி
சணந்தனில் மண்ணற்கும்பஞ் சமைத்திடச் சொல்லலானார்.

34) சித்திரக் கோபுரங்கள் தேரொடு கலசமுத்திரை
மத்தியிற் குருக்கள்யாகம் மன்னவர் கலசமுத்திரை
செத்தவர் முத்திசேரச் செய்வது கலசமுத்திரை
இத்திரஞ் சுயம்புமன்னன் எடுத்தது கலசமுத்திரை.

35) காலினால் நகாரமிட்டுக் கனிவுடன்வயிற்றில் மவ்வாற்
சீலமாங் கையும் நெஞ்சுஞ் சிறந்திடுசிகர மாகும்
ஏலவே வாகாரம் இலங்கியசண்கள் யவ்வாம்
சூலமாம் பிரணவங்கள் சுத்திய திரிகைச் சக்கிரம்.

36) சக்கரத்துள் ளேயாட்டம் சகலமும் பிரமசிருஷ்டி
சக்கரவனைந்த பாத்திரம் சகலற்கும் பிராணகும்பம்
சக்கரம் சுயம்பு மன்னன் தரணி மண் ணுடையனானன்
சக்கரம் கைகொள்ளென்றார் தகைவுருகுலாலன் தன்னை.

37) ஆதியில் பிரமவேதி யவனருள் வங்கிசத்தான்
கோதிலாக் குலாலநின்னாற் குறித்தபொற் றளினாளே
நீதியாய்த் திரண்டுருண்டநிரைகும்ப அபிசேகத்தால்
சோதியாய் விம்பமன்னர் குருக்களுந் தோன்றுவாரே.

38) கழல் செய்யலுற்ற கும்பம் கனிவுடன்உனக்கு சீடன்
அழகிய தம்பத்துக்கு அருள்பெருவிம்பஞ் சீடன்
பலம்பெறும் விம்பத்துக்கு பணிகின்ற மனுக்கள் சீடன்
குலனயன் குலாலபிரமன் குணமுடன்பணிசெய் யென்றான்.

பிரம்மபுராணம் உற்பத்தி காண்டம்

39) அருளாகும் உன்பதியிற் றேவர் வாழ்வார்
அநேகநதித் தலங்க ளுந்தன்மனையே யாகும்
அருளான பிரமனுக்கு நீயே பிள்ளை
அம்புசனே கும்பமுனக் கருமை புத்திரன்
பொருளான கும்பத்துக்கு விம்பம் மைந்தன்
புகழாகப் பணிபவரே அதற்குச் சேயே
நருளான அவர்களுக்கு ஆசகனே பாலன்
நன்மையிலா லோபிகள்தா னவர்க்குச் சேயே.

40) உன்னுடைய வாக்கிலெழும் பேச்சே மந்திரம்
உலகில் நீசெய் நீதிகளே நான்குவேதம்
சன்னதியி லிலங்குதிரு விளக்கும்நீயே
தகைமைகுரு குலதெய்வம் உலகம் நீயே
சொன்ன மொழிதவரி யுன்னையிகழ்ந் தோரெல்லாம்
சொற்கமின்றி கிளைகுலங்கள் உலைந்தே பின்னும்
அன்னியராய் நீசனுமாய் நரகில் வீழ்வான்
அவதியுற்றே உணவினுக் கலைவான் ருனே.

பாண்டவர்கள் காட்டில் வாழ்ந்தபோழ்து, தாய், தந்தைக்குத் திதிசெய்ய பஞ்சமாதேவி என்ற நகரில் குலாலன் வீட்டிற்கு ஒவ்வொரு ஆண்டும் வந்து திதிமுடித்து அன்றிரவு தங்கி மறுநாள் செல்வது வழக்கம். ஒருநாள் பீமன் தூக்கத்தில் புரண்டு பாண்டங் -களை உடைத்துவிட்டான். அக்கடனுக்காக தருமர் தம் தம்பியை சில காலம் குலாலருக்கு ''பணிசெய்'' என்று கட்டளை இட்டுச் சென்ருர். பீமர் பணி செய்தல்.

### குலாலபுராணம்—பீமனைப் பணிகொண்ட படலம்

41) அப்பதி சென்று விடுதியோர் மனையில்
அவர்களும் திதிகள் கொடுத்து
ஒப்புடன் அனைவரும் புசிப்பது முடித்து
ஒருபொழுது இரவுகண் டுயின்ருர்
செப்பமாய் வீமன் மூலிகள் விடுத்துச்
சேக்கிளைப் பாண்டங்க ளுடைத்தான்
தப்பித மறிந்த இந்திரஞால உடையார்
சமர்த்தனைத் தடுத்திட லாஞன்.

### கார்த்திகை தீபம்

42) திருந்து மாவலியும் பதமதுபெற்ற, திருவுரு
கார்த்திகை வருமுன்
பொருந்திய விளக்குச் செய்வதை யெடுத்துப்
போர்வீமனடுங்கிய பயந்தானத்
திருந்திய குலாலன் றகைமைகள் கேட்டான்
திறல்வேந்தனடிமை யென்றுரைத்தான்
கரந்தரு தருமனி ருக்கின்ற வனம்போய்க்
கைமுறியடிமையைப் பெற்ருன்.

குலாலன் வீட்டில் தங்கினுல் நாள், கோள், சகுனம், தோஷம் ஆகிய குற்றங்கள் அகலுமென்ருர் தருமர்.

43) பதித னிற்றேவர் முனிவரும் வந்து பாவங்கள்
தொலைந்திடுங் குலாலன்
பதித னிலுலித்த பாண்டங்கள் விம்பம் பலத்தொடு
தேவர் வருவார்
பதிதனில் மறையோர் வேந்தரும் பலவர்க்கும் பயணத்தின்
தோஷங்கள் போக்கும்
பதித னிலெவரு முத்தியை யடைவார் பார்தனில்
தலைமக னிவனே

## பலசாதி பெண்களின் கர்ப்பத்தைக் காத்து காமாட்சிக்கு பீடமிட்டவர் குலாலகுரு சங்கர உடையார்

ஆதண்ட சக்ரவர்த்தி காமாட்சியம்மனுக்கு கோவிலெடுத்து கும்பாபிடேகம் செய்ய நான்குவேதம் தெரிந்த அந்தணர்கள் முனிவர்கள் கூடி யாகசாலை அமைத்து வேள்விதொடங்க அவ்வேள்வி-யிலிருந்து குண்டோதரன், குருதிக்கண்ணன், மந்திமுகத்தன், சங்குகண்ணன், பூழைக்கண்ணன், புலிமுகத்தான், குந்துகாலன், குண்டுவயிரன், சங்கிலியிழுத்தான், சப்பாணிமொட்டை, ஒத்தைப்பல்லன், ஓரிமுகத்தான், ஊளைமூக்கன், உதிரங்குடித்தான், என்று சொல்லப்பட்ட பூதகணங்கள் தோன்றி அந்தணர்களை சிரம் வேறு, சிலரை கரம்வேறு, சிலரை இரத்தங்கக்க அடித்து மாய்த்தது மன்னன் வருந்தினன். இரவில் காமாட்சி அரசன் கனவில் தோன்றி, யாகசாலை அமைத்த இடம் புதையல் இருப்பதால், பூதம் காத்திருக்கிறது. அதற்கு கர்ப்பஸ்திரீகளை பலியிடவேண்டுமென்று கூறியதைக் கேட்டுமன்னன் பயந்து, அமைச்சரிடம் கூற ஆலோசித்து சங்கர உடையாரை தலைமையாகக்கொண்டு யாகத்துக்கொரு கர்ப்பஸ்திரீ-களை கொலைசெய்து முடித்ததும் ஒரு முழு தேங்காய் வெடிக்கும். இதுகேட்டு கேரளநாட்டு ஆரையூர் வாணலிங்க உடையார் புண்ணிய வேளான் என்ற இருவரும் தக்க நூல்களைக் கொணர்ந்து ஆதாரங் காட்டி கல்யாண பூசணிக்காய் பலி, கர்ப்பஸ்திரீயை பலிகொடுத்த தற்குச் சமம் என்றனர்.

44) பெண்பலி போலக் கூழ்ப்பாண்டமொக்கும் பேசிய
தேங்கின் காயதுவு
நண்ணு மந்திரத்தா லுடைபடக் காட்டி நயந்த
வரிருவரும் ஒத்துப்
பண்ணி யயாகம் பழுதுருப் பெண்கள் பாதுகாத்
திடலு மேயிந்த
மண்ணுளோ ரறிந்து வேந்தனுக் குரைக்க மன்னவனு
மதிசயித் துகந்தான்

ஆதண்டச் சக்கரவர்த்தி, வானலிங்க உடையாரையும்
புண்ணியவேளாளன் மற்றும் சங்கர உடையாரையும்
சிறப்பித்தமைக் கூறும் பாடல்

45) அன்ன வன்யாகம் நடந்தவை முடித்த வருந்
தவக்குலாலரை நோக்கி
மன்னிய தீர்த்தப் பிரசாதமும் மாலைமணத் துடன்
பிணக்கோலக் காட்சி
அன்னை காமாட்சி சன்னிதி முன்பு அழகிய
கச்சி வீதியிலும்
பன்ன காபரண னேகாம் பனருளாற் பல்லாண்டு
பல்லாண்டு வாழ்க!

கரிகால் சோழனை வளர்த்தவன் குலாலன்

சோழ மண்டலத்தை இளஞ்சேட்சென்னி ஆண்டநாளில் சாரமா முனிவர் சிவனுக்குப் பரித்துவைத்த மலரை நாட்டோடும் திருடிவந்து அரசனிடம் மலர் வணிகன் தருவான். அதைத் தன் மனைவியான புவனமால்தேவிக்கு அணிவிப்பான். மலர் திருடு போவதை அறியாத சாரமாமுனிவர் சம்புகேஸ்வரரிடம் முறையிட்டு அழுவார். ஒருநாள் மலர் திருடும் கள்ளனைப் பிடித்து அரசனிடம் கொண்டுசொல்ல அரசன் அவற்றிற்கு செவி சாய்க்கவில்லை. இறைவனிடம் சாரமாமுநி முறையிட இன்னும் எட்டு நாளில் சோழ நாடு வெள்ளத்தாலழியும் நல்லோர்களை வெளியேற்று என்ற ஈசன் கட்டளைப்படி வெளியேறினர். சிவனருளால் மண்மாரி, மழைமாரி, கல்மாரி பெய்ய அரசனும், தேவியும் குதிரையேறி மேற்றிசை நோக்கிப் போக வெள்ளப் பெருக்கால் அரசனும் குதிரையும் இறந்துபட்டனர். கர்ப்பினியான புவனமால்தேவியை மருதையாற்றங்கரையில் ஒதுக்க குலாலன் கரையேற்றி தீயைமூட்டி, வெப்பம்தர உணர்வுபெற்ற ராணிக்கு உணவு நல்கி தன் வீட்டில் வைத்துக் காப்பாற்றினன். குழந்தை பிறந்தது, வளர்ந்தான்.

46) வளர்த்திட மைந்தன் பருவ முமாகி வழங்கிடும்
வித்தைகள் கற்றும்
செளித்தவ னிருப்ப முனிவனு மிருந்து செயம்பெற
வரசாணை நாட்ட
களிப்புடன் சகலர் வருமுன்னே யானைகண்டுமே
மைந்தனை யெடுப்ப
அழுது மேதேவி குலாலனுக் குறைக்க அவன்விஞ்சை
செபித்துமே தடுத்தான்

47) ஆனையு மெடுப்ப முடிபடாதாலே வறிந்து பின்னுறையூருக்கேசி
சேனைகள்வரவே தேவியைக்கண்டு சிந்தித்து விடையருட் கேட்ப
தானவன் தன்னைக் கரியது தூக்க தகுவிஞ்சை மந்திரமோதி
போனவரறியக் கரிகழற்கீறிப் பெயரிட்டு யானைமேல் வைத்தார்

சுந்தரர் திருவாக்கில் முதலில் திருநீலகண்டத்து குயவனுர்க் கடியேன் என்று போற்றப்பட்டு அறுபத்துமூவரில் முதலாமவராகக் கூறினுர் எனில் குலாலர் பெருமையை என்னென்பது "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன்" என்ற தலைப்பு சிவபெருமான் எடுத்துக் கொடுத்த அடியாகும்.

## தேவாரம்

48) தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்குமடியேன்
திருநீலகண்டத்து குயவனுர்க் கடியேன்
இல்லையே என்னுத இயற்பகைக் கடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப் பொருளுக்குமடியேன்
விரிபொழில் சூழ்குண்டையூர் விரல்மீண்டர்க்கடியேன்
அல்லிமென் முல்லை அம்தார் அமர்நீதிக்கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

பட்டினத் தடிகளார் வாக்கில் இரண்டாமவராக திருநீலகண்டரைக் கூறினுர் என்ருல் குலாலன் பெருமையை என்னென்பது

49) வாளால் மகவறிந்து ஊட்டவல்லே னல்லேன் மாதுசொன்ன
சூளால் இளமை துறக்க வல்லனல்லேன் தொண்டுசெய்து
நாளாறில் கண்ணிடர்ந்து அப்பவல்லேன் நானினிச்சென்று
ஆளாவதெப்படியோ திருக் காளத்தி அப்பனுக்கே.

## சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் திருநீலகண்ட நாயனுரைப் பற்றி கூறியது

50) வேதியர்தில்லை மூதூர் வேட்கோவர் குலத்துவந்தார்
மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவுமில்லா அற்புதத் தனிக்கூத்தாடும்
நாதனுர் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்

## சிவபெருமான் திருவாக்கு

51) மன்றுளே திருக்கூத்தாம் அடியவர் மனைகள்தோறும்
சென்றவர் நிலைமை காட்டும் தேவர்கள் தேவர்தாமும்
வென்ற ஐம்புலனுல் மிக்கீர் விருப்புடன் இருக்க நம்பால்
என்றும்இவ விளமை நீங்கா தென்றெழுந்தருளினுரே

## குலால புராணம்

விண்டலத்துத் தேவர்களும் விண்ணேர் சூழ
வேட்கோவன் திருநீல கண்டனுன
தொண்டருமே இளமைபெற பரமனுரும்
தொல்சபையோர் காணவருள் சுறந்திட்டாரே

## சாலிவாகனப் படலத்தில்

சூதமுனிவர், ஏனைய முனிவர்சளுக்கு கீழ்வருமாறு கூறுகிறுர்:

முனிவர்களே, கோதாவரி ஆற்றங்கரையிலே, திருமுக்கூடல் என்ற திருத்தலத்தில் குலால வம்சத்தாரில் கீர்த்தி பெற்ற வீரசைவனுன இராகவேசுர உடையார் என்பவருக்கு ஆரவேலி என்ற பெண் பிறந்தாள். இளம்வயதிலேயே அவளுக்குத் திருமணம் ஆனது. நாயகனுன திருமணுளன் வீட்டில் இருந்தபோது பூப்பெய்தினுள் அந்த நாள் கணவனுக்கு ஆகாதென்று சோதிடர் கூற, அவளை தாய் வீடு அனுப்பி சிறையில் வைக்கச் சொன்னுர்கள். ஒருநாள் இராக-வேசுர உடையார் மனைக்கு சிவயோகி வர அவரை உபசரித்து, மகள் நிலையைக் கூறினுர். சிவயோகி, நாளை நல்லநாள். உன் மருமகனை அழைத்து வந்து சாந்திமுகூர்த்தம் செய்தால் அவளுக்குப் பிறக்கும் பிள்ளை அவனியை ஆளுவானென, அப்படியே இராகவேசுர உடையார் செய்தார். சிவயோகி மறைந்தார்.

52) காலமேயெழுந்து மருகன்றன்னை கனிவுடன்அழைத்து மேயன்று
சீலமாசாரக் குருவரு டன்னுற் தெளிவுறு ருதுமணஞ் செய்து
கோலமதுடனேயிருவரும் விடுதி குறித் தனுப்பிடவவர் குறியாய்
லீலைகள்செய்து கருவதுதரித்தா ளிலங்கிடவிவ் வுலகறிய.

கி. பி. 78ல் சாலிவாகனன் பிறந்தான்.

53) அறிந்தனர் பிதாவு மன்னையுமகிழ்த்து
அவடன்னைப் பருவங்கள்பேணி
வறுந்தியேபத்து மாதமும்சுமந்து மைந்தனைப்
பெற்றுள் மகிழ்வாய்1
சிறந்துறுநாளுங் கோளுலக்கினமுஞ் சென்ம
பத்திரிக் கையுமெழுதி
பொருந்திய நாமஞ் சகரனென்றுரைத்து
பொற்புன லாட் டினர்புனிதம்.

ஐந்து வயதில் கல்விகற்கச் சென்று 12 வயதில் பள்ளி முடித்தான். இதற்கிடையில் மண்ணுல் யானை, குதிரை போன்ற உருவம் செய்து சூளைஇட்டு வீடுநிறப்பினுன். பாட்டன் இராகுவேசுர உடையார். பாண்டம் வனையச் சொல்லினுர். அதை கேளாததால், அடிபட்ட சகரன் காடு சென்று சாலிய முனியிடம் அடைக்கலம் புகுந்தான். தாய், தந்தை பாட்டன் முதலியோர்த் தேடித்தேடி, அழுதனர். சாலியமுனிவர் இவன் எதிர்காலமறிந்து பிம்பங்கள் உயிர்பெற்று எழும் மந்திரம் உபதேசித்தார். 12 ஆண்டு கடந்து சாலியமுனியும் சாலிவாகனனும் திருமுக்கூடல் வர அவரைக் கண்டு ஆனந்தம் அடைந்தனர். சாலியமுனிவர் கூறினுர். இவன் செய்த உருவங்களைக் கொண்டு வாருங்களென. அப்படியே கொணர்ந்தனர். கமண்டலநீர் தெளித்து மந்திரம் ஓதச் சொன்னுர் சீடனுக்கு. அவனும் அப்படிச் செய்ய அந்த உருவங்களும் அதற்குரிய குணங்களுடன் உயிர் பெற்றதுகண்டு அனைவரும் பயந்தனர். மீண்டும் மண்பொம்மை -யாக்கினுர். முனிவர் கான் சென்றுர். விக்கிரமாதித்த மன்னனுக்கு திரைகட்ட வேண்டாமென்று மக்களைத் தூண்டினுன் சாலிவாகனன். விக்கிரமாதித்தன் படையெடுத்தான். சாலிவாகனன் மண் உருவங்களை மிருகமாக்கினுன். யுத்தம் செய்து

54) சாலியன் சக்கிர மண்ணிற் செய்த தளங்களை
யேவினுன் விரைவில்விடுப்ப
கோலிய படையை மடித் தன ரன்று குறுகி
வேதாளமும் வந்து
சீலன் விக்கிர மன்பட்டி யையெடுத் துச்சென்
றுருவ னத்தில்
கோலிய முன்னுள் வரமது பெற்ற சிங்கவேள்விக
டன்னை முடித்தார்

(கருத்து) விக்கிரமாதித்தனுடைய சேனைகளை-மண்ணுல் செய்து ஏவியபூதங்கள் இரும்புத்தடியால் அடித்து தேர், கொடி, குடை யானை, குதிரை, சாரதி, காலாள் முதலிய சேனைகளைக் கால்வேறு, தோல்வேறு சிரப்வேறு இடைவேறு சின்னுபின்னப்படுத்தி கால்மாடு தலைமாடாய் உருமாறி, உடல்மாறி, உறைமாறிக், களைமாறி, உளமாறி, சிரமாறி, கரமாறி, கால்மாறி, மேல்மாறி, தோள்மாறி, உதிரம் சொட்ட ஒழிந்த நிலையைக்கண்ட விக்கிரமாதித்தன் விசனப்பட வேதாளம் வந்து டட்டியையும் விக்கிரமாதித்தனையும் தூக்கிச்சென்றது. காட்டில் அரசன் சிங்க வேள்விசெய்து அதில் சிங்கத்தை உற்பத்திசெய்து அனுப்ப அதையும் சச்கரத்தால் சாலிவாகனன் அழித்து நாட்டை ஆண்டான். அன்றுமுதல் இன்றுவரை சாலிவாகனுன சகாப்த

என்று ஆண்டைக் கணக்கிடுகிறோம். இன்று சாலிவாகன சகாப்தம் 1902 என்று கணக்கிடுகிறோம்.

### ததி பாண்டன் சரிதம்

ஆயர்பாடியில் கண்ணன் வெண்ணெ. பால், தயிர் ஆகியவற்றை திருடி தின்றதைக் கண்ட யசோதை அடிக்க ஓடி வர, கண்ணன் பயந்து பிரம்ம குலாலனான ததிபாண்டனிடம் ஓடி காலே பிடித்துக் கொண்டு என்னை என் தாய் அடிக்க வருகிறாள். அவளுக்குத் தெரியாமல் என்னை மறைத்து விடு என. உடனே ததிபாண்டன் ஒரு தாழியில் கண்ணனை மூடி மேலே ததிபாண்டன் அமர்ந்தார். யசோதை ஓடிவந்து கேட்க இங்கில்லை என்றான். யசோதை சென்ற பிறகு வெளியே வர தாழியை திறக்கச் சொல்ல கண்ணா! கண் தெரியாத எனக்கு கண் கொடு. எனக்கும் இந்த தாழிக்கும் என் வம்சத்தாருக்கும் முத்தி தர வேண்டும் என் நண்பன் நெய்காரச் செட்டிக்கும் உன் நாமம் செப்புவோருக்கு முத்தியளிப்பாய் என்று வேண்ட அப்படியே அருள் புரிந்தான் கண்ணன்.

55) ஆணொடு பெண்ணலியாகி அனந்த மாவீர் ஆயபுரி
நந்தனுக்குப் புதல்வனானீர்
வேணபடி யுலகமதை மயக்கு மாயா வீடுபெருமுத்தி யெனக்
கருளு மென்றார்
தோணுவது ஏதுபிள்ளாய் மதலைஎன் தாய்துரத்தி
யடிப்பதற்குநான் பயந்துவந்தேன்
காணுவது மதியிழந்த குலாலநீயென கருத்துரைத்துச்
சிரித்து நின்றான் கள்வன்தானே.

56) மனமகிழ்ந் துவைகுண்டப் பதவி தந்தார்
அனையவர்க்கு முத்தண்ட வணிக ருக்கும்
இனவழியின் சினேகிதற்கும் உம்மைப் போற்றும்
எல்லவற்கும் முத்திபெற வரந்தந் தாள்வாய்,

57) அனைவருக்கு முனக்கு முந்தன் கைதாளிக்கும்
அடைவீ ரென் றச்சதனு மருள லோடு
இனையகதியெய்தினர்கள் அசோதைமைந்தன்
ஈன்றவள் கைக் ககப் படா தேகினனே,

### வெண்ணிக் குயத்தியார் பாடிய புறநானூறு பாடல்

சங்கப் புலவர் வரிசையிலே அமர்ந்து கவிபாடி கரிகால் பெருவளத்தானை மகிழ்வித்த வெண்ணிக்குயத்தியார் பாடல் காலத்தை வெல்லும் கவியாக விளங்குகிறது.

## நல்லவனோ அவன் ?

58) நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உருவோன் மருக்
களியியல் யானைக் கரிகால் வளவ
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே

குலோத்துங்க சோழன் அவைப்புலவரென தருக்கோடிருந்த ஒட்டக்கூத்தனின் கொட்டமடக்கியவன் குலாலன். ஒட்டக்கூத்தன் முன் மிடுக்காய் நின்ற குயவனைப் பார்த்து செய்யுள் பாடும் திறத்தை அறியும்படி ஒட்டக்கூத்தன் கலிவிருத்தம் பாடினான். அஃது

கலி விருத்தம்

59) மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்தவ னாரடா.

அதற்கு குயவன்

60) கூனை யுங்குட முங்குண்டு சட்டியும்
பானை யுஞ்செயு மங்குசப் பையல்யான்,

இப்பாடலில் தன்னை யானையென்று கூறிய ஒட்டக்கூத்தனைப்பார்த்து அந்த யானையை அடக்கும் கருவியாகிய "அங்குசம்யான்" (அம்குசப் பயல்) என்றான்.

## குலாலர் பிரம்மாவின் கட்டளைப்படி தண்டமும் சக்கரமும் பெற்றார்

61) சாற்றிய மூன்று காலம் சந்தியா வந்தனையுஞ் சிந்தை
தோற்றுங் காயத்திரி தன்னைச் செபிக்கவும் வேதபாடம்
போற்றலும் விரிவோங்கார போதமே கர்த்தா வென்ன
தோற்றிய குலால பிரமாக் குருவதாந் தொல்புவிக்கே.

62) நன்றெனத் திருவுளம் நயந்து நான்முகன்
தன்கைசக்கரம் தண்டமீய்ந்தனன்
குன்றினு முயர்ந்ததோட் குலால மாமுனி
மன்றலந் தொடையவன் மலர்க்கரம் வாங்கினான்.

பொங்கல் திருநாள் பொலிவுற்றது யாரால்-தொகுப்பாசிரியர் பா

1 நாடுதா னிருந்தாலென்ன? நகரமே யிருந்தாலென்ன?
வீடுதா னிருந்தாலென்ன? வெள்ளி பொன் நகைகலென்ன?
தேடிடும் பொருள்களென்ன? திருநீகண்டன் செய்யும்
ஓடுதானில் லாவிட்டால் உலகமும் பாழதாமே.

2 வெங்கல மிரும்புயீயம் வெள்ளி பொன் சாடியென்ன?
கங்கண கடையமென்ன? காசுடன் பணங்களென்ன?
பங்கயன் குலத்துதித்த பணிதிரு நீலகண்டன்
மண்கல மில்லாவிட்டால் வையகம் பாழதாமே'

3 மாடது யிருந்துமென்ன? மச்சு மாளிகையுமென்ன?
காடுகள் சென்னலென்ன? கழனிகளிருந்து மென்ன?
ஆடை யாபரணமென்ன? அயன்திரு நீலகண்டன்
சாடிதா னில்லாவிட்டால் தரணியோர் மாழ்வார்தாமே.

கற்கால மனிதனை தற்கால மனிதனுக்கினன் குலாலன்

4 கீர்த்தி பெற்றிருந்தாலென்ன? கிளையுடன் வாழ்ந்தாலென்ன?
பார்திப னாகியிந்த பாருலகாண்டாலென்ன?
சாத்மீகம் ஞானமுள்ள சக்கரக்குலத் தோர் செய்மண்
பாத்திர மில்லாவிட்டால் பாருள்ளோர் மாழ்வார்தாமே,

5 பட்டுப் பட்டாடை மெத்தை படுக்கைகள் பவிசு மென்ன?
அட்டிகை கல் பதித்த ஆபரண நகைகலென்ன?
கொட்டுணி அயன்குலத்து குலாலர்கள் மண்ணால் செய்த
சட்டிதா னில்லாவிட்டால் தரணியோர் மாழ்வர்தாமே,

தேவாலயங்களுக்குபூசை செய்பவர்கள் குலாலர்கள். சேலம் கோயமுத்தூர், தஞ்சாவூர் போன்ற ஊர்களிலும் தென்னாற்காடு போன்ற மாவட்டங்களிலும் இன்றும் காணலாம். இதை அறிந்த அருணகிரி சுவாமிகள் வயலூர் முருகன் பாடலில்,

நாதவிந்துகளாதி நமோநம
வேதமந்திரசொரூபா நமோநம
ஞான பண்டித சுவாமி நமோநம —வெகுகோடி
.................................
ஈதலும்பல குலாலர் தன் பூசையும்
மோதுதன் குணவாசார நீதியும்
ஈரமுங்குரு சீர்பாத சேவையும் —உறவாகி

என்று பாடியிருக்கிறார்.

(15543)
(15543)

கம்பர் காளிகோயில் பூசாரி.

வெண்ணிக்குயத்தியின் பரம்பரையில் உதித்தவன் கம்பன்.

வெண்ணிக் குயத்தி வீராங் கனையின்வழி
அன்னை ஈந்திட ஆலய பூசனைப்
பண்ணுங் கம்பன் பகர்ந்திட்ட காவியம்
விண்ணும் மண்ணும் வியக்கச் சிறந்ததே.

—தொ. ஆசிரியர்

---

இந்நூலைப் படித்தோர் பெறும் பயன்
பதினாறு பேற்றை விளக்கும் பா

நேரிசை வெண்பா

அழகறிவு நல்லூழ் அமைபொறுமை கல்வி
மழலைச்சொல் மக்களொடு நெற்பொன் — இளமைபுகழ்
வாழ்நாள் துணிவு வலிவெற்றி நோயின்மை
ஆழ்நுகர்ச்சி யாம்பதி னாறு.

வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

சுபம்

உ

ஸ்தாபிதம்: 1942 போன்: 2614

விஜயம் செய்யுங்கள்!

யாவருக்கும் ஒரே விலை!

**கைராசி ஜவுளிக்கடை**

**39 ஆண்டுகளாக வாடிக்கையாளர்களின் நல்லாதரவு பெற்றது**

காஞ்சியில் தங்கள் தேவைக்கேற்ற வண்ண வண்ண கலர்களில் புதிய டிசைன்களில் எல்லா மில் ரகங்களும் சிறந்த கைத்தறி ஜவுளி ரகங்களும் ஏராளமாக தருவித்து குறைந்த இலாபத்தில் மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்பனை செய்யும் மிக சிறந்த ஜவுளி ஸ்தாபனம்:

புகழ்பெற்ற



# ஸ்ரீ சரஸ்வதி ஜவுளி ஸ்டோர்ஸ்

## & ஹாண்லூம் டெக்ஸ்டைல்ஸ்

உரிமை: M. S உடையார் & சன்

**100, காமராஜர் தெரு,**

**காஞ்சீபுரம்-1.**